# அபிவிருத்தி லொத்தர் சபை

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சு

(1997 இல. 20 சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது)

DLB DEVELOPMENT LOTTERIES

## அபிவிருத்தி லொத்தர் சபையில் காணப்படும் கீழ்க்காணும் பதவிக்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**01. பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) பதவிக்காக சேர்த்துக்கொள்ளல்**

| | | |
|---|---|---|
| பதவிப் பெயர் | : | பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) |
| வெற்றிட பதவி எண்ணிக்கை | : | 01 |
| சம்பளக் குறியீடு | : | HM-1-1-2016(i) |
| சம்பள அளவு | : | ரூ. 80,295 - 15 X 2,270 - 114,345 (முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/2016(I)இன் பிரகாரம் குறித்த சம்பள கட்டத்தில் நிறுத்தப்படும்) |

**கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்**

**வெளி விண்ணப்பதாரிகளைச் சேர்த்துக்கொள்ளல் (கீழேயுள்ள 1.1 அல்லது 1.2)**

1.1 கணக்கியல் பாடத்துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

கணக்கியல் துறையை அடிப்படையாகக் கொண்ட பட்டம் (Masters) பெற்றிருத்தல் அல்லது பதவியுடன் சம்பந்தப்பட்ட பாடத்துறைக்குப் பொருந்தும் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனமொன்றில் கிட்டிய அங்கத்துவத்தை பெற்றிருத்தல்.

மற்றும்

அரச, அரசகூட்டுத்தாபனம், சபை, நியதிகள் நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுனத்தில் முகாமைத்துவ வட்டத்தில் பதவியொன்றில் குறைந்தபட்சம் குறித்த துறையில் பதினைந்து வருட (15) சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்.

அல்லது

1.2 அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனமொன்றில் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் (உதாரணம் : இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் (ICASL) அல்லது பட்டய முகாமைத்துவ கணக்காளரின் நிறுவனம் (CIMA) அல்லது அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர்களின் நிறுவனம் (ACCA) ஆகிய நிறுவனமொன்றில் முழுமையான அங்கத்துவம்)

மற்றும்

அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனத்தில் முகாமைத்துவ மட்டத்தில் பதவியொன்றில் குறைந்தபட்சம் குறித்த துறையில் பதினைந்து (15) வருட சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்.

**02. உள்ளக விண்ணப்பதாரிகளைச் சேர்த்துக்கொள்ளல்**
**(கீழ்க்காணும் 2.1 அல்லது 2.2 தகைமைகள்)**

2.1. மேற்படி இல. 01 இன் கீழ் வெளி விண்ணப்பதாரிகளுக்காக குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்கும் உதவிப் பொது முகாமையாளர் (MM1-1) பதவியின் கடமையாற்றும் 1ம் தர அதிகாரிகள் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் சேவையாற்றும் அதிகாரிகள்

அல்லது

2.2. உதவிப் பொது முகாமையாளர் சேவை வகுதியின் 1ம் தர பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருட பதவியுடன் சம்பந்தப்பட்ட பாடத்துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**03. வயது**

35 வயதிற்கு குறையாத மற்றும் 55 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு மற்றும் அரச அதிகாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.

**04. நிதி அனுகூலம்**

i. முகாமைத்துவ சேவை 02/2016(i) சுற்றுநிருபத்தின் HM1-1 பதவியுடன் சம்பந்தப்பட்ட அடிப்படை சம்பளம்.

ii. நிதியமைச்சினால் அனுமதிக்கப்பட்டுள்ள ஏனைய கொடுப்பனவுகள்

iii. ஊழியர் சேமலாப நிதிக்கு 15% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கு 3% நிறுவனத்தினால் செலுத்தப்படும்.

iv. அரச வியாபார சுற்றுநிருப 01/2015(ii) இன் பிரகாரம் சாரதி ஒருவர் மற்றும் எரிபொருள் 135 லீட்டருடன் உத்தியோகபூர்வ வாகனமொன்று வழங்கப்படல் அல்லது சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்படுமாறு தனிப்பட்ட வாகனத்தை பாவித்தல் சார்பாக செலுத்தப்படும் ரூ. 50,000/= கொடுப்பனவுடன் எரிபொருள் 135 லீட்டர் வழங்குதல்.

v. போக்குவரத்து வசதிகள் தவிர்த்து அடைவுகளின் பெறுமதி ரூ. 300,000/= இற்கு மேல் அடைவதற்கு உரிமை உண்டு.

**குறிப்பு :**

- ***இரட்டை அடிப்படையில் சேர்த்துக்கொள்ளும் போது :-***

மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு இரட்டை அடிப்படையில் 02 வருட காலத்திற்கு அரச சேவையில் இருந்து விடுவிக்க முடியும் ஆவதுடன், குறித்த விண்ணப்பங்கள் அவ் விண்ணப்பதாரி சேவையாற்றும் திணைக்களங்கள் / நிறுவன தலைமையூடாக சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரி தேர்ந்தெடுக்கப்படின் விடுவிக்க முடியும் எனக் குறிப்பிட்டு குறித்த திணைக்கள / நிறுவன தலைமையினால் விநியோகிக்கப்படும் சான்றிதழையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**05. தரக் கட்டுப்பாட்டு உதவியாளர் பதவிக்கு சேர்த்துக்கொள்ளல்.**

| | | |
|---|---|---|
| பதவிப்பெயர் | : | தரக்கட்டுப்பாட்டு உதவியாளர் |
| வெற்றிடப் பதவி எண்ணிக்கை | : | 01 |
| சம்பளக் குறியீடு | : | MA3-2016 |
| சம்பள அளவு | : | ரூ. 32,200-10 X 445 - 11 X 660 - 10 X 730 - 5 X 750 - 54,960 (முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/2016 இன் பிரகாரம் குறித்த சம்பள கட்டத்தில் நிறுத்தப்படுவர்) |

**5.1. தகைமைகள் :** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இரசாயனத்திற்குக் கிட்டிய விஞ்ஞானமாணி பட்டத்தை பெற்றிருப்பதுடன் குறித்த துறையில் 01 வருட சேவை அனுபவம்

**5.2. வயது** : 22 வயதிற்குக் குறையாத மற்றும் 45 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.

**06. பொதுவான நிபந்தனைகள் :**

i. **நியமனத் தன்மை -**

நிரந்தர அடிப்படையில் சேர்த்துக்கொள்ளும் போது, ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கான உரித்துரிமை சான்றிதழ்

ii. **வேறு அனுகூலங்கள்**

நிதி அமைச்சினால் அனுமதிக்கப்பட்டுள்ள ஏனைய கொடுப்பனவுகள்

iii. சகல விண்ணப்பதாரிகளும் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். பதவிக்காக ஒப்படைக்கப்படும் வேலைகளை முறையாக நிறைவேற்றுவது போலவே நாட்டின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதுக்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகைமையைக் கொண்டிருத்தல். வேண்டும். சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.

iv. **சேர்த்துக்கொள்ளும் முறை :**

நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படுமாறு அரச வர்த்தமானியில் அல்லது பகிரங்க அறிவித்தல் பிரசுரிப்பதன் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்பு அந்தந்த பதவியுடன் சம்பந்தப்பட்டவாறு எழுத்துமூல பரீட்சை மற்றும் / அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் சபையினால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் பெறுபேறு (பேச்சு / எழுது அல்லது செயன்முறையை சமர்ப்பிக்கும் பரீட்சை) இவ் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

v. **விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி :**

2025.03.03 சகல கல்விச் சான்றிதழ், தொழில்சார் தகைமைகளைக் குறிப்பிடும் சான்றிதழ் மற்றும் சேவை அனுபவம் பற்றிய சான்றிதழ்களின், உறுதி செய்யப்பட்ட பிரதிகளுடன் அபிவிருத்தி லொத்தர் சபை உத்தியோகபூர்வ இணையதளத்திற்கு உட்பட்ட மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பமொன்றை 2025.03.03 அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டியதுடன், விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். இல்லையெனில் விண்ணப்பங்களை அபிவிருத்தி லொத்தர் சபையின் மனிதவள முகாமைத்துவ பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் கொண்டுவந்து உள்ளிடல் வேண்டும். அமைச்சு / திணைக்களம் / ஏனைய அரச நிறுவனங்களில் சேவையில் ஈடுபடும் விண்ணப்பதாரிகள் நிறுவன தலைமையூடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**தலைவர் / பிரதம நிறைவேற்று அதிகாரி**
**அபிவிருத்தி லொத்தர் சபை**
**இல. 356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்த,**
**யூனியன் பிளேஸ், கொழும்பு - 02**